**Cross Examination**
**Dated: 06.02.2023**

ஒ.எஸ்.எண். 69 /2018, PW-1, திரு. ரஹமத்துல்லா, த/பெ.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

பிரதிவாதியிடம் 2017ம் வருட ஆரம்பத்தில் ஆலோசனை கேட்டு கோழிப்பண்ணை ஆரம்பித்தேன். பிப்ரவரி மாதம் 2017ம் வருடம் கோழிப்பண்ணை ஆரம்பித்திருக்கலாம். கோழிப்பண்ணை வைத்த இடத்தை 2017ல் நான் கிரையம் வாங்கினேன். அது எந்த மாதம் என்று தெரியாது. 2017ல்தான் அந்த இடத்திற்கான பத்திரம் பதிவு செய்யப்பட்டது. முக்கண்ணாமலைப்பட்டி கனரா வங்கயில் கோழிப்பண்ணை வைப்பதற்கு 20 லட்ச ரூபாய் கடன் வாங்கினேன். கோழிப்பண்ணை வைத்திருக்கும் இடத்தை தவிர வேறு எந்த விவசாய நிலமும் இல்லை. எனக்கு சொந்த ஊர் அன்னவாசல் என்றால் சரிதான். அங்கு 2016-2017ல் நான் வீடு கட்டினேன். அந்த வீடு கட்டுவதற்கு புதுக்கோட்டை லெட்சுமி விலாஸ் வங்கியில் 23 லட்சம் கடன் வாங்கினேன். புதுக்கோட்டை பேமிலி சூப்பர் மார்க்கெட் எங்கள் குடும்பத்திற்கு சொந்தமான சொத்து என்றால் அது எனது தனிப்பட்ட சொத்து. அதை நான் குடும்பத்தாரிடம் பொதுவாக ஒப்படைத்திருக்கிறேன். சூப்பர் மார்க்கெட் இடத்தை விற்றுவிட்டேன் என்றால் சரிதான். அது 2021ல் விற்கப்பட்டது. அதை வைத்து நான் வீட்டுக்கடனை அடைத்துவிட்டேன் என்றால் அந்த கடனை அடைக்கவில்லை. மற்ற கடன்களை அடைத்துவிட்டேன். எனக்கு சுமார் 30லிருந்து 40 லட்ச ரூபாய் கடன் இருந்தது. நான் வீட்டுக்கடனை இதுவரை அடைக்கவில்லை. கோழிப்பண்ணை கடனை 2021ம் வருடம் அதை விற்று அடைத்துவிட்டேன். 2013ம் வருடத்திலிருந்து சூப்பர் மார்கெட் நடத்திவந்தேன். அதில் 4 ,5 பேர்கள் வேலை பார்த்தார்கள். செல்வகுமார் என்பவர்கள் என்னிடம் வேலை பார்க்கவில்லை. சுகன்யா என்பவர் என்னிடம் வேலை பார்த்தார். சுகன்யாவிற்கு 8000 ரூபாய் சம்பளம், அவர் கடையில் பொருட்களை அடுக்கி வைக்கும் வேலை பார்த்தார். சிறிது நாட்கள் கழித்து அவர் வேறு கடைக்க வேலைக்கு போய்விட்டார். செல்வகுமார் கடைக்கு முன் பழக்கடை வைத்திருந்தார் என்றால் அவர் எலக்ட்ரிக் கடை வைத்திருந்தார். செல்வகுமார் புதுக்கோட்டையில் எனக்கு 2, 3 வருடங்களாக பழக்கம். அதற்கு முன்பு சிறு வயதில் 4,5 வருடங்களாக பழக்கம். செல்வகுமார் எனது கடையில் வேலை பார்த்தார் என்றாலும் அதை நான் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. என் கடையில் எத்தனை வேலை பார்க்கிறார்கள் என்று தொழிலாளர் துறைக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் நகல் தற்போது என்னிடம் இல்லை. கடையை மூடிவிட்டாச்சு. சூப்பர் மார்கெட் கடையை 2020ம் வருடம் கடைசியில் மூடினேன். நான் வருமானவரி தொழில் நடத்தும் வரை செலுத்தி வந்தேன். ஒவ்வொரு வருடமும் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். அந்த நகல்கள் தற்போது என் வசம் இல்லை. ஆனால் நகல்கள் தரலாம்.

2016-17 மற்றும் 2018-2019 வருமானவரி கணக்குகளை பார்த்தால் என் வருமானம் தெரியவரும் என்றால் சரிதான். வருமானவரி கணக்குகளில் பிரதிவாதிக்கு கொடுத்த கடனை காண்பிக்கவில்லை. என்னிடம் 14 லட்சம் இருப்பு இருந்த விபரத்தை வருமானவரி கணக்கில் காண்பிக்கவில்லை. கடைக்கு அன்றாட வரவு, செலவு கணக்குகளை கணினியில் கணக்கு வைத்திருந்தேன். வரவு, செலவு வைத்திருந்தேனா என்றால் என் வசம் இல்லை அதை ஆடிட்டரிடம் கேட்டால்தான் தெரியவரும். நான் பிரதிவாதிக்கு எந்த வங்கியிலிருந்து பணம் எடுத்து கொடுத்தேன் என்றால் லெட்சுமி விலாஸ் வங்கியில் கடை வருமானத்திலிருந்து வந்த வருமானத்தை எடுத்துக்கொடுத்தேன். வங்கியிலிருந்து எவ்வளவு எடுத்து கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. வங்கி கணக்கை எடுத்து பார்த்தால் எவ்வளவு பணம் என்று தெரியவரும் என்றால் தெரியவரும். வங்கி கணக்கு நகலை பெறலாம். லெட்சுமி விலாஸ் வங்கியில் எனக்கு இருந்தது நடப்பு கணக்கு என்றால் சரிதான். அன்றாடம் கிடைக்கும் பணத்தை நாங்கள் வங்கயில் போடுவோம் என்றால் வங்கி கணக்கு மூலம் பெறப்படும் பணம் மட்டுமே வங்கிக்கு செல்லும், மற்ற பணம் இருப்பில் இருக்கும். நான் வியாபாரிகளுக்கு ஏதேனும் காசோலை கொடுத்திருந்தால் அதற்குண்டான தொகையை வங்கியில் போடுவேன். பிரதிவாதி கடன் கேட்டு 15, 20 நாட்களில் கடன் கொடுத்திருப்பேன். பிரதிவாதி என்னிடம் 15 லட்சம் கடனாக கேட்டார். நான் 14 லட்சம் கொடுத்தேன். பிரதிவாதி என்னிடம் சிங்கப்பூர் போய் வியாபாரம் செய்வதற்கும், அவரது கடன் தீர்ப்பதற்கும் என்னிடம் கடன் கேட்டார். பிரதிவாதி கோழி ஷெட் போட்டதற்காக ஏற்பட்ட கடனை தீர்ப்பதற்காகவும் என்னிடம் கடன் கேட்டார். நான் கோழிப்பண்ணை ஆரம்பிப்பதற்கு முன்னாடியே பிரதிவாதி கோழிப்பண்ணை தொழில் செய்து வந்தார் என்றால் நான் கோழிப்பண்ணை ஆரம்பிப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்பு அவர் ஆரம்பித்தார். பிரதிவாதி என்னிடம் கடன் கேட்டவுடன் கொடுப்பதற்கு என்னிடம் பணம் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதியின் வசதி, வாய்ப்பு பற்றிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவர் என்னிடம் நன்றாக பழகி வந்தார். தனக்கு பல தொழில்கள் இருப்பதாக பிரதிவாதி என்னிடம் சொன்னார். அதற்கான ஆவணங்கள் எதையும் நான் பார்வையிடவில்லை. என்னிடம் 14 லட்ச ரூபாய் சுமார் ஒரு வார காலம் என்வசம் இருந்தது. 15.10.2017ம் தேதியில் என்னிடம் 14 லட்ச ரூபாய் இருப்பு இருந்தற்கான ஆவணங்களை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் இருந்ததா என்றால் வங்கி கணக்கில் பணம் இருந்தது. மற்றும் அந்த நேரத்தில் தீபாவளி வியாபாரம் இருந்ததால் கையில் ரொக்கம் இருந்தது. எனது வங்கி கணக்கை நான் தாக்கல் செய்தால் 15.10.2017ல் எவ்வளவு பணம் இருந்தது என்ற விபரம் தெரியவரும் என்றால் அதற்கு ஒரு மாதத்திற்குள் உள்ள கணக்கு விபரங்களை பார்த்தால் தெரியவரும். 2018ம் வருடம் ஆரம்பத்தில் நச்சாந்துபட்டி யூனியன் பேங்க ஆஃப் இந்தியா வங்கியில் நகைகளை அடகு வைத்து கடன் வாங்கினேன் என்றால் ஆம். அதை எனக்காக வாங்கவில்லை. என் சகோதரனுக்காக வைத்து கடன் வாங்கினேன்.

அதே நகையை 2019ம் வருடம் அடகு வைத்தேன் என்றால் கடனை புதுப்பித்தேன். நான் என் சகோதரருக்காக அடகு வைத்தேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. அவருடைய நகை நான் அடகு வைத்து கொடுத்தேன். நான் வழக்கறிஞர் அறிவிப்பு கொடுப்பதற்கு முன்பு பிரதிவாதி என்மீது புதுக்கோட்டை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்தார் என்றால் நான்தான் முதலில் கொடுத்தேன். எனக்கு எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. புகாரின் நகல் என்வசம் உள்ளதா என்றால் தேடிப்பார்த்தால்தான் தெரியும். போலீசார் போனில்தான் என்னை கூப்பிட்டுவிட்டார்கள். பிரதிவாதி எந்த தேதியில் புகார் கொடுத்தார் என்றால் நான் புகார் கொடுத்த பின்பு பிரதிவாதி புகார் கொடுத்தார். ஒருநாள் முன், பின் கொடுத்திருப்பார். பிரதிவாதி கொடுத்த புகாரின் பேரில் என்னை புதுக்கோட்டை மாவட்ட குற்றப்பிரிவில் கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றால் முதல் நான் கொடுத்த புகாருக்கு நமணசமுத்திரம் காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். பின்பு மாவட்ட குற்றப்பிரிவில் பிரதிவாதி கொடுத்த புகாருக்கு விசாரித்தாக்ள். மாவட்ட குற்றப்பிரிவில் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலத்தை கொடுக்கும்போது வழக்கறிஞர் இருந்தார். எனக்கு படிக்க தெரியும். நான் 7வது வரை படித்திருக்கிறேன். எழுத தெரியாது. முஸ்தபாவிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். நான் கொடுத்த வாக்குமூலத்தின் நகல் என் வசம் உள்ளதா என்றால் தேடிப்பார்த்தால் தான் தெரியும். நான் கொடுத்த வாக்குமூலம் மாவட்ட குற்றப்பிரிவில் இருக்குமா என்றால் இருக்கும். எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே உள்ள கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக அண்ணாமலை ஆடிட்டர் முன்பாக பேச்சு வார்த்தை நடந்ததா என்றால் இல்லை. நீதிமன்றத்திலோ, காவல்துறையிலோ அல்லாமல் எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே உள்ள பிரச்சினை சம்மந்தமாக வேறு எங்கும் பேச்சு வார்த்தை நடக்கவில்லை. 08.11.2016ல் பணமதிப்பு இழப்பு நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். மேற்படி பணமதிப்பு இழப்பு நடவடிக்கைக்கு பின்னிட்டு ஏதேனும் கையிலிருந்து வங்கி கணக்கில் பணம் டெபாசிட் செய்தேனா என்றால் ஏற்கனவே வங்கியில்தான் பணம் இருந்தது. பிராமிசரி நோட்டை பூர்த்தி செய்தவரின் பெயர், முகவரி எனக்கு தெரியாது. பிரதிவாதிதான் கூட்டி வந்தார். திருநாவுக்கரசு என்பவரின் பெயர் முகவரி எனக்கு தெரியும். அவரை 2013-2014ம் வருடத்திலிருந்து எனக்கு தெரியும். எனது கடையிலிருந்து மூன்றாவதாக அஜ்மல் அலி என்பவரின் கடை உள்ளது. அந்தஇடத்தில் அஜ்மல் அலி வெகுநாட்களாக கடை வைத்திருக்கிறார். அவர் எனக்கு உறவினர் என்றால் இல்லை. பக்கத்து கடைக்காரர். அஜ்மல் அலி, மாணிக்கம், திருநாவுக்கரசு ஆகிய மூவரும் என்னுடைய நண்பர்கள் என்றாலும், அஜ்மல் அலி எனக்கு உறவினர் என்றாலும் அவர்களை வைத்து போலியாக பிராமிசரி நோட்டை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னிடம் வேலை பார்த்த சுகன்யாவிற்கு லெட்சுமி விலாஸ் வங்கியில் கணக்கு இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதியின் காசோலை ஒன்றை பூர்த்தி செய்து சுகன்யா பேரில் எனது வங்கி கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது என்றால்

சரியல்ல. நான்தான் பிரதிவாதியின் காசோலைகளை பயன்படுத்தி செல்வகுமார் என்பவர் பெயரில் இரண்டு காசோலை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. செல்வகுமார் எனக்கு பினாமி என்பதால் வழக்கில் ஆஜராகாமல் பிரதிவாதியை மிரட்டி பணம் பெற முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. சுகன்யாவை பயன்படுத்தி ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சிறிய நோட்டில் உள்ள கையெழுத்து எதுவும் என்னுடையது இல்லை. நான் சொல்வதுபோல் பிரதிவாதி என்னிடம் எந்த கடனும் வாங்கிக்கொண்டு பிராமிசரி நோட்டு எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 03.09.2018ம் தேதியிட்ட ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை. 03.09.2018ம் தேதியிட்ட ஆவணம் எனக்கும் பிரதிவாதிக்கும் எனக்கும் இடையிலானது என்றாலும், அதில் நான் கையெழுத்து மாற்றிபோட்டுவிட்டு என்னுடையது இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் சீட்டுப்பணம் பெற்றுக்கொண்டு சிறிய நோட்டில் கையெழுத்து போட்டுக்கொடுத்துவிட்டு தற்போது இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்னிடம் 25 லட்சம் சீட்டுப்பணம் கட்டினார் என்றாலும்அதை தற்போது மோசடி செய்வதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் ஏற்கனவே நான் பல லட்சம் கடனாக இருந்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதிக்கு பணம் கொடுக்கும் அளவிற்கு என்னிடம் பணம் இல்லை என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் பரிகாரம் எனக்கு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.